3rd February 1966]

பிராந்தியங்களிலும் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த நீண்ட இழைப் பருத்தி வெற்றிகரமாக வந்தால், நம்முடைய பற்றுக் குறையை ஓரளவுக்கு பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த ரக காட்டன் மலைப் பிராந்தியங்களில் வருகிறது. கேரளத்தில் பயிரிடப்படுகிறது என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் நமது மாறிலத்தில் மலைப் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்தில் மலைப் இல்லை என்றால் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை மிகவும் உயர்ந்த ஆல்டிட்யூடில், உயர்ந்த சிகரங்களில் பயிர் செய்ய முடியாது. இதைப்பற்றி விவசாய ஆராய்ச்சிகளெல்லாம் இருக்கின்றன. அதை எந்த இடத்தில் நம்முடைய ராஜ்யத்தில் பயிர் செய்ய முடியும் என்பதை விவசாய இலாகா கூட பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : இந்த நூல் ஆலைக்கு லைசென்ஸ் யார் பேருக்குக் கொடுக்கப்பட்டது ? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டது ? இதுவரையில் என்னென்ன முயற்சிகளை அவர்கள் செய்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திரு. டி. என். எம். அருணாசலத்திற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. 1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொடுக்கப்பட்டது. நிலம் வாங்கியிருக்கிறார்கள். ரூ. 50,000 மூலதனம் சேர்த்திருக்கிறார்கள்.

'டிராக்டர்' களுக்கு வரி விலக்கு

* 70 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு மோட்டார் வாகன வரி (Motor Vehicles Tax) விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரி தென்னாற்காடு மாவட்ட விவசாய டிராக்டர் உரிமையாளர்களிடமிருந்து மனு ஏதேனும் அண்மையில் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Orders have since been issued exempting from payment of motor vehicles tax, tractors and trailers used exclusively for transporting agricultural produce of the owners of the vehicles and for collecting one-third of normal rate of tax when such vehicles are used for transporting agricultural produce of persons other than the owners of the vehicles with effect from 1st January 1966.

SRI C. CHIRANJEEVULU NAIDU : What are the rules framed to distinguish whether it is the property of the owner or private persons?

[3rd February 1966

THE HON. SRI R. VENKATARAMAN : There are no special rules. If it is proved that it is being used for the transport of the owner's goods, there is no tax but if they are transporting other people's goods, they have to pay the tax.

திரு. ம. கமலநாதன் : இந்த டிராக்டர்கள், டிரெய்லர்கள், உழவு காலத்தில் 2, 3 மாதங்களுக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன. மற்ற காலங்களில் அவைகளை 'ஐடிலாக' வைப்பதற்குப் பதிலாக, 'ஹாலேஜ் பர்பஸ்ஸுக்காக' அவைகளுக்கு லைசென்ஸ் கொடுத்து, ஏதாவது ஓரளவுக்கு டாக்ஸ் வசூலிக்கும் முறையை அரசாங்கம் கையாள முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இப்போழுது செய்திருக்கிறோம். மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸ் என்று அவைகளுக்காக டாக்ஸ் கட்டவேண்டியதில்லை. ஆனால் இப்போழுது 'ஒன்-தர்டு' டாக்ஸ் கட்டினால் மற்றவர்கள் பண்டங்களையும், யார் பண்டங்களையும் எடுத்துச்செல்வதற்கு 1-1-1966 முதல் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆயுத போலீசிலிருந்து வேலை நீக்கம்

* 71 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், தனிநிலை ஆயுதம் தாங்கிய போலீஸ் துறையிலிருந்து கான்ஸ்டேபிள்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) ஆம். சிறப்பு ஆயுதந் தாங்கிய போலீஸ் படையைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளினின்றும் 1965 ஜூலை மாதத்தில் சில கான்ஸ்டேபிள்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்கள் எண்ணிக்கை விவரம் வருமாறு :

ஆயுதந் தாங்கிய சிறப்புப் போலீஸ் II-ம் படைப் பிரிவு—15.

ஆயுதந் தாங்கிய சிறப்புப் போலீஸ் III-ம் படைப் பிரிவு—5.

(உ) அனுமதியின்றி அல்லது உத்தரவின்றி வேலைக்கு வராதிருந்தது, வேலையை அதிகமாய்ப் புறக்கணித்தது, மேலதிகாரிகளின் ஆணைகளுக்கு அறவே கீழ்ப்படிய மறுத்தது, மேலதிகாரிகளின் ஆணைகளை வேண்டுமென்றே மீறியது, மருத்துவக் காரணங்களினால் வழங்கப்பட்ட விடுப்புக்கால அளவுக்கு மேற்பட்டு வேலைக்கு வராமலிருந்தது, வேலையை விட்டு ஓடியது போன்ற காரணங்களினால் அவர்கள் வேலையிருந்து நீக்கப்பட்டனர்.